
# இலங்கையில் புவியியல் ரீதியான தனித்துவம்

## 02

புவிக்கோளத்தில் இலங்கையின் அமைவிடம் தேசப்படம் 2.1 இல் காட்டப்பட்டுள்ளது. இதில் இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியிலே இந்தியாவிற்குத் தென் கிழக்கில் தீவாக அமைந்திருக்கும் விதத்தினைப் பாருங்கள்.





**தேசப்படம் 2:1 இலங்கையின் அமைவிடம்**

இலங்கையையும், இந்தியாவையும் 32 கி.மீ நீளமுள்ள பாக்குநீரிணை பிரிக்கின்றது. அத்துடன் ஆசியாக் கண்டம், ஆபிரிக்காக் கண்டம், அவுஸ்திரேலியாக் கண்டம் என்பவற்றிற்கு அருகில் அமைந்திருப்பதையும் நீங்கள் அவதானிக்கலாம்.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

**செயற்பாடு**



உலகப்படத்தில் ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களையும் இந்தியா, இலங்கை, இந்து சமுத்திரம், அரபிக்கடல், வங்காள விரிகுடா, பாக்குநீரிணை என்பவற்றையும் குறித்துப் பெயரிடுக.

**இலங்கை ஆசியாக் கண்டத்திற்குத் தெற்கே இருக்கும் சிறு தீவாகும். அத்துடன் வேறு பல தீவுக் கூட்டங்கள் அடங்கியதாக இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளது.**

## நிலமும் ஆட்புல எல்லையும்

நீங்கள் வசிக்கும் வீட்டிற்கோ, பாடசாலைக்கோ உரிய வரையறுக்கப்பட்ட நிலப்பிரதேசம் இருப்பது போலவே நாம் வாழ்கின்ற இலங்கை நாட்டிற்கும் வரையறுக்கப்பட்ட பிரதேசம் நிலத்திலும் கடலிலும் இருக்கிறது.


இலங்கையைச் சூழவும் கடல் எல்லையாக 12 கடல் மைல்கள் (22.02 கி.மீ) இருக்கிறது. சர்வதேச சமுத்திரச் சட்டங்களின் பிரகாரம் கடலுக்கு அருகில் அமைந்திருக்கும் எல்லா நாடுகளுக்கும் 12 கடல் மைல்கள் உரிமையுள்ளதாக இருக்குமென வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கையின் ஆட்புல எல்லையானது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்சர்வதேசச் சமுத்திரச் சட்டப்படி ஒரு நாட்டின் எல்லைக்கு உட்பட்ட கடல், கடலியல் வளம், கனிய வளங்கள் ஆகிய யாவும் அந்நாட்டிற்கே உரித்துடையது என வரையறுக்கப்பட்டுள்ளது.

(தேசப்படம் 2.2) கடல் எல்லை தொடர்பாக சர்வதேச சமுத்திரச் சட்டம் 1994 நவம்பர் 14 ஆம் திகதி முதல் உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் 1982 டிசம்பர் 10 ஆம் திகதி முதல் இலங்கையும் கைச்சாத்திட்டது.

ஆட்புல கடல் பிரதேசத்தில் தீவுகள், குடாக்கள், களப்புகள், கடலடித்தள மேடைகள், கண்ட மேடைகள், கடற்கரை ஆகிய சகல அம்சங்களையும் காணக்கூடியதாக இருக்கிறது. இலங்கையைச் சூழ ஆழமற்ற கண்டமேடைப்பகுதிகள் காணப்படுவதால் மீனுக்கான உணவு அதிகளவில் காணப்படுகிறது. இதன் காரணமாக மீன்பிடிக் கைத்தொழில் சிறப்பாக நடைபெறுகின்றது. மேலும் இலங்கைத் தீவைச் சூழ கடற்கரை உள்ளதால் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைவதற்கும் காரணமாக அமைகிறது.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "


# இலங்கையின் தரையும் கடல் ஆட்புல எல்லையும்




**தேசப்படம் 2:2 இலங்கையின் தரை, கடல் ஆட்புல எல்லைகள்**

ஆதாரம்: இலங்கை உலக தேசப்படப் புத்தகம் (நில அளவையாளர் திணைக்களம்)

## செயற்பாடு



இலங்கைத் தேசப்படத்தில் ஆட்புல கடல் எல்லையை நீலநிறத்தினாலும் நிலப்பகுதியை மஞ்சள் நிறத்தினாலும் நிழற்றிக்காட்டுக.




" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

வட அகலக்கோடு $5^{\circ}-55'$ முதல் வட அகலக்கோடு $9^{\circ}-51'$ கிழக்கு நெடுங்கோடு $79^{\circ}-42'$ முதல் கிழக்கு நெடுங்கோடு $81^{\circ}-52'$ ஆகிய எல்லைகளுக்குள் இலங்கைத் தீவு அமைந்திருக்கிறது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 65,610 சதுர கி.மீ ஆகும். இது வடக்கே பருத்தித்துறை முனையிலிருந்து தெற்கே தேவேந்திர முனைவரையும் 432 கி.மீ. நீளத்தையும், கிழக்கே சங்கமன் கந்தை முதல் மேற்கே கொழும்பு வரையும் 224 கி.மீ. அகலத்தையும் கொண்டதாகும்.

**செயற்பாடு**



1. இலங்கைப் புறவுருவப்படத்தில் பருத்தித்துறை முனை, தேவேந்திர முனை, கொழும்பு, சங்கமன் கந்தை முனை என்பனவற்றைக் குறித்துப் பெயரிடுக.
2. வடக்கிலிருந்து தெற்கு வரையும் மேற்கிலிருந்து கிழக்கு வரையும் செங்குத்தாகவும், கிடையாகவும் இந்த இடங்களை இணைக்கும் விதத்தில் இரு கோடுகள் வரைக.
3. அக்கோடுகளில் இலங்கையின் நீளம், அகலம் என்பவற்றை கிலோமீற்றரில் எழுதுக.




**தேசப்படம் 2:3 தொலமியின் உலகத்தேசப்படம்**

தேசப்படம் 2.3 இனை அவதானியுங்கள். உலகில் முதன் முதலாக வரையப்பட்ட தொலமியின் தேசப்படத்தில் இலங்கை தப்பிரபேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை மிகப் பழைய காலம் முதல் கீழைத்தேய மேலைத்தேய நாடுகளிலும் பிரசித்திபெற்றிருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

அத்துடன் பல இனத்தவர்களாலும் அதாவது அரேபியர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் ஆகியோரால் இலங்கை அறியப்பட்டிருந்ததோடு பல வகையான


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

பெயர் கொண்டும் அழைக்கப்பட்டது. இதன் மூலம் பல இனத்தவர்களிடமும் இலங்கை பிரசித்தி பெற்றிருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

**மாணவர் ஆய்வு**

இலங்கை பல இனத்தவர்களாலும் பல பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. அவ்வினத்தவர்களையும் அவர்கள் சூட்டிய பெயர்களையும் அட்டவணைப் படுத்துக.




**தேசப்படம் 2.4**

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்ததனால் புராதன காலம் முதல் கிழக்கு, மேற்கு நாடுகளின் வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. மேலைத்தேய, கீழைத்தேய நாடுகளுக்கு பலவிதமான பொருட்களைப் பண்டமாற்றுச் செய்யும் மத்திய நிலையமாக இலங்கை இருந்ததென்பதை வரலாறு மூலம் அறிந்து கொள்வதோடு தேசப்படம் 2.4 இன் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் , ஆங்கிலேயர் போன்ற மேற்குலக நாட்டவர்கள் இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கு அதன் நிலைய அமைவிடமே முக்கிய காரணமாக அமைந்தது. புராதன காலம் முதல் கடல் வழிப் போக்குவரத்தில் பிரசித்தி பெற்றதன் காரணமாக இலங்கை இந்து சமுத்திரத்தில் உள்ள ஒரு தீவாக அமைந்துள்ளதால் அருகில் உள்ள நாடுகளோடு சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரத்துறைகளில் பல்வேறு தொடர்பையும் செல்வாக்கையும் பெற்று விளங்கியது.



**செயற்பாடு**

1. உலகப் புறவுருவப்படத்தில் செங்கடல், பாரசீக வளைகுடா, மலாக்கா தொடுகடல், சீனக்கடல், மத்திய தரைக்கடல் ஆகியவற்றைக் குறித்துப் பெயரிடுக.
2. தேசப்படம் 2.4 படத்தில் காணப்படும் கடல் மார்க்கத்தை வேறு ஒரு தேசப்படத்தில் வரைந்து அந்தக் கடல் மார்க்கத்தோடு தொடர்புடைய நகரங்களைக் குறித்துப் பெயரிடுக.

**இன, மொழி, மத வேறுபாடு இருப்பினும் நாம் எல்லோரும் ஒருநாட்டின் குடிமக்களாவோம்.**



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

## நிருவாக எல்லைகள்


இலங்கை ஏனைய எல்லா நாடுகளிலிருந்தும் கடலால் பிரிக்கப்பட்டிருக்கும் ஒரு தனித்துவமான நாடு. நிருவாக நடவடிக்கைகளுக்காக அது பல்வேறுவகையான அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிர்வாக அலகுகளாகப் பிரித்து வேறுபடுத்துவதற்கு பல்வகையான எல்லை வகைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. உங்கள் வீட்டிற்கும் பாடசாலைக்கும் எல்லைகள் உண்டு. அந்த எல்லைகள் பல்வேறு காரணங்களுக்காக மாற்றம் அடையும் கீழே மாணவர்கள் சிலர் தங்கள் இடங்கள் சம்மந்தமாக கலந்துரையாடுவது தரப்பட்டுள்ளது.






" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

**செயற்பாடு 01**



1. மேலே தரப்பட்டுள்ள கலந்துரையாடலின்போது மாணவர்கள் முன்வைத்த காணியின் எல்லைகளாகப் பயன்படுத்தப்பட்டனவற்றை எழுதுக.
2. மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து ஒவ்வொருவரினதும் வீட்டுத்தோட்டத்தின் எல்லைகளாகக் காணப்படுவனவற்றை உள்ளடக்கிய அட்டவணை ஒன்று தயாரிக்குக.

**செயற்பாடு 02**



1. இலங்கையில் மாகாணங்களை வேறுபடுத்துவதற்கு எல்லைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஆறுகளின் பெயர்களைத் தருக.
2. அந்த ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ள மாகாணங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. நீங்கள் வாழும் பிரதேசத்திலுள்ள ஆறானது மாகாண எல்லையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைத் தேடியறிக.


இலங்கை தனது நிருவாக நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக நிருவாக எல்லைகளாக இயற்கையான மலைத்தொடர்கள், கால்வாய்கள், ஆறுகள், வீதிகள் ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளது.

இலங்கையின் நிருவாகப் பிரிவுகளில் மிகவும் சிறிய பிரிவாகக் காணப்படுவது கிராம சேவகர் பிரிவாகும். ஒரு பெரிய நகரம் பல கிராம சேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். பரந்த பிரதேசங்களைக் கொண்ட பிரிவுகளும் ஒரு கிராம சேவகர் பிரிவுக்குள் அமைந்திருப்பதையும் காணலாம்.

எல்லாக் கிராம சேவகர் பிரிவுக்கும் பெயரும், இலக்கமும், உண்டு. அந்தப்பிரிவுக்குள் அமைந்துள்ள எல்லா வீடுகளுக்கும் வீட்டு இலக்கம் உண்டு. மக்களுடன் மிகவும் அண்மையில் இருந்து பணியாற்றுகின்ற அரச அதிகாரி கிராம சேவகர் ஆவார்.

இலங்கையில் பல கிராம சேவகர் பிரிவுகள் சேர்த்து ஒரு பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல பல பிரதேச செயலாளர் பிரிவுகள் ஒன்றிணைந்து மாவட்டம் என்ற நிருவாக அலகு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அது போன்று பல மாவட்டங்கள் இணைந்து பாரிய மாகாணப்பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இம் மாகாணங்கள் சேர்ந்து முழுநாடும் ஒரு நிருவாக அலகாக இயங்குகிறது.

**செயற்பாடு**



1. கிராம சேவகரால் ஆற்றப்படுகின்ற சேவைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
2. வகுப்பறையில் இருக்கும் மாணவர்கள் வசிக்கின்ற கிராம சேவகர் பிரிவின் இலக்கம், பெயர் என்பவை அடங்கிய விடயங்களைப் பட்டியல்படுத்துக.
3. கிராம முன்னேற்றத்திற்காக கிராம சேவகருக்கு நீங்கள் உதவக்கூடிய முறையினை விளக்குக.


**மாணவர் ஆய்வு**

i. கிராம சேவகரைச் சந்தித்து நீர் வசிக்கும் கிராம சேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்களின் பெயர்களை எழுதுக.
ii. உமது கிராமசேவகர் பிரிவுத் திட்டப்படத்தை வரைந்து உமது வீடு இருக்கும் இடத்தைக் குறித்துக்காட்டுக.
iii. உமது கிராமம் அல்லது நகரத்தின் எல்லையைப் பிரிப்பதற்கு அடிப்படையாக அமைந்தது எதுவென்பதைத் தேடியறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

| நிருவாகப்பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| கிராம சேவகர் பிரிவு | 14,022 |
| பிரதேச செயலாளர் பிரிவு | 331 |
| மாவட்டம் | 25 |
| மாகாணம் | 09 |

ஆதாரம்: சனத்தொகை புள்ளி விபரத்திணைக்களம் - 2004


**செயற்பாடு**



1. இலங்கையின் நிருவாகப் பிரிவுகளைப் பெயரிடுக.
2. உங்கள் கிராமம் அல்லது நகரத்துக்குரிய கிராம அலுவலர் பிரிவின் பெயரையும், பாடசாலை அமைந்திருக்கும் பிரதேச செயலாளர் பிரிவின் பெயரையும் மாவட்டம், மாகாணம் ஆகியவற்றின் பெயரையும் எழுதுக.

நிருவாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக மாகாணம், மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு, கிராமசேவகர் பிரிவு போன்ற நிருவாக அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேசப்படம் 2.5 ஐ பார்க்கவும்.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "




நிருவாக நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு நிருவாகப் பிரிவுக்கும் அலுவலர்களும், பணியாளர்களும் நியமிக்கப்பட்டு இருக்கின்றனர். இந்த அலுவலகங்களில் இருந்து சனத்தொகை, விவசாயம், கைத்தொழில் என்பனவற்றின் நடவடிக்கைகள் பற்றியும், பெருந்தெருக்கள், தொடர்பாடல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் பற்றியும், வெள்ளம், மண்சரிவு, வரட்சி, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தம் பற்றியும் பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தேசப்படம் 2.5**
**இலங்கையின் நிருவாக அலகுகள்**

**செயற்பாடு**

1. பாடசாலைக்கு அண்மையில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தைச் சென்று பார்வையிடுவதற்கு களச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்க.
   அங்கு நடைபெறுகின்ற பணிகளை குழுக்களுக்கு பிரித்துக் கொடுத்து தகவல்களைச் சேகரிக்குக.
2. சேகரித்த தகவல்களை வகுப்பறையில் முன்வைத்து ஆசிரியருடன் இணைந்து அந்நிறுவனம் பற்றிக் கலந்துரையாடுக.

**மாணவர் ஆய்வு**


1. மாணவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளின் பெயர்களையும், விலாசத்தையும், பத்திரிகைகளின் உதவியுடன் பெற்றுக்கொள்க.
   அப்பாடசாலைகளை மாகாணம், மாவட்டம், வலயம், கோட்டம் என்றவாறு ஆசிரியரின் உதவியுடன் அட்டவணை ஒன்றைத் தயாரித்து வகுப்றையில் காட்சிப்படுத்துக. உ-ம்: மே.மா./ஹோ/ஸ்ரீ பியரத்ன மத்திய மகா வித்தியாலயம். பாதுக்கை.

| பாடசாலையின் பெயர் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|
| | | | | |

2. நாட்டின் நிருவாக அமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதத்தினைக் கருத்திற் கொண்டு உமது பாடசாலை நிருவாக அமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதத்தினை ஓர் அட்டவணை மூலம் காட்டுக.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

# இலங்கையின் மாகாண, மாவட்டப் பிரிவுகள்




**தேசப்படம் 2.6 இலங்கையின் மாகாண, மாவட்ட பிரிவுகள்**
**(மூலம் M.D. குணசேன பிலிப் உலகத் தேசப்படம் - 2006)**


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

| இலங்கையின் நிருவாக எல்லைகளுக்கான குறியீடுகள் | |
|---|---|
| • மாகாண எல்லை | + - - + - - + - - + |
| • மாவட்ட எல்லை | +·+·+·+·+·+ |
| • பிரதேச செயலாளர் பிரிவு | —•••—•••— |
| • கிராமசேவகர் பிரிவு | —••—••—•• |
| • நகரசபை எல்லை | — — — — — — — — — — — — — |



### செயற்பாடு

1. ஆசிரியருடன் கலந்துரையாடி மாகாணம், மாவட்டம் என்பன பிரிக்கப்பபட்டுள்ள விதம் அதன் எல்லைகள் என்பவற்றைத் தெரிந்து கொள்க.
2. இலங்கையில் எத்தனை மாகாணங்கள் உண்டு என்பதையும் அம்மா-காணங்களின் பெயர்களையும் மாவட்டங்களின் பெயரையும் அதன் தலை நகரங்களையும் பின்வரும் அட்டவைணயைப் பிரதி செய்து பூரணப்படுத்துக.

| மாகாணம் | மாவட்டங்களின் எண்ணிக்கை | மாவட்டங்களின் பெயர் | தலைநகரம் |
|---|---|---|---|
| | | | |

3. இலங்கையின் மிகப் பெரிய மாகாணத்தையும் மிகச்சிறிய மாகாணத்தையும் குறிப்பிடுக.
4. அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம் எது?
5. இலங்கையின் புறவுருவப்படத்தில் மாவட்டங்கள், மாகாணங்கள் என்பவற்றின் எல்லைகளை வழக்கக்குறியீடுகளினால் குறித்துக் காட்டுக.
6. உமது பாடசாலைக்குரிய மாகாணத்தை இளம் கபில நிறத்திலும் மாவட்டத்தை கடும் கபில நிறத்திலும் நிறந்தீட்டுக.
7. அதற்கு எல்லையாக உள்ள மாகாணத்தையும் மாவட்டத்தையும் பெயரிடுக.

### மாணவர் ஆய்வு

i. இலங்கைத் தேசப்படப் புத்தகத்தின் உதவியுடன் மாகாணங்களின் பரப்பளவைத் தேடிப் பெற்று அதன் பரப்பளவுகளுக்கு ஏற்றவாறு இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.

ii. மேல் மாகாணத்தில் அதிக மக்கள் வாழ்வதற்கான காரணங்கள் நான்கு தருக.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "


**இலங்கை நிருவாகத்தை இலகுபடுத்துவதற்கு நிருவாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் மக்கள் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு.**

## காலநிலை

தொலைக்காட்சிச் செய்தியின் முடிவில் நாள்தோறும் வானிலை அறிக்கை பற்றிக் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள்.

நாளை அதிக மழையுடன் கூடிய வானிலை நிலவும். மத்திய மலைநாட்டின் மேற்கு பகுதியில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்வதோடு பலமான காற்றும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய தினம் நுவரெலியாவில் குறைந்த வெப்பநிலை பதிவாகியுள்ளது.

**செயற்பாடு**



1. தரப்பட்டுள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வானிலைத் தகவல்களை எழுதுக.

**குறிப்பிட்ட பிரதேசத்தில் குறுகிய காலத்தில் நிலவும் வளிமண்டல நிலைமைகள் வானிலை எனப்படும்.**


வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காற்றின்வேகம், காற்று வீசும் திசை என்பவற்றின் செயற்பாட்டிற்கு ஏற்ப வளிமண்டல நிலைமைகள் தீர்மானிக்கப்படும். இவ்வாறு பெறப்பட்ட வானிலைத் தகவல்களின் தொகுப்பே அப்பிரதேசத்தின் **காலநிலை** எனப்படும்.

**நீண்ட காலத்தில் வானிலை நிலைமைகளை அவதானிப்பதால் பெறப்படும் முடிவு காலநிலை எனப்படும்.**

**மாணவர் ஆய்வு**

விஞ்ஞான ஆய்வு கூடத்தில் உள்ள வெப்பமானியைப் பயன்படுத்தி ஒரே நாளில் பல சந்தர்ப்பங்களில் வெப்பத்தை அளந்து அட்டவணை தயாரிக்குக.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "





**தேசப்படம் 2.7 புவிக்கோளத்தில் சூரியக் கதிர்கள் விழும் விதம்**


ஒரு நாட்டின் காலநிலையைத் தீர்மானிப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பிரதானமாகப் புவியின் மீது சூரியக் கதிர்கள் பெறப்படும் வீதத்திற்கு ஏற்ப வெப்பநிலை கூடிக் குறையும். புவி கோள வடிவினதாக இருப்பதால் மத்திய கோட்டிற்கு அண்மையில் செங்குத்தாக சூரியக்கதிர்கள் விழுகின்றன. இதனால் இங்கு கூடிய வெப்பநிலை பெறப்பட, துருவப் பகுதிகளுக்கு சூரியனது கதிர்கள் சாய்வாக விழுவதன் மூலம் அப்பகுதிகளில் வெப்பநிலை குறைந்து காணப்படுகின்றது.

இலங்கை மத்திய கோட்டிற்குக் அண்மையில் அமைந்திருப்பதால் ஆண்டு முழுவதும் ஒரே அளவான வெப்பத்தைப் பெறுகின்றது. இலங்கை வெப்பவலயத்தில் அமைந்துள்ளது என்பதை தேசப்படம் 2.7 அவதானிப்பதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். இலங்கை மத்திய கோட்டிற்கு அண்மையிலும் வட அகலாங்கு $5^{o}$ - $10^{o}$ க்கு இடையிலும் அமைந்திருப்பதால் வருடம் முழுவதும் ஒரேயளவான வெப்பத்தைப் பெற்றுக்கொள்கிறது. எனினும் ஒரு தீவாக அமைந்துள்ளதால் வெப்பம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சராசரி ஆண்டு வெப்பநிலை $27.8^{o}C$ ஆகும். எனினும் பிரதேசங்களுக்கிடையில வெப்பநிலையில் வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

**செயற்பாடு**



தேசப்படம் 2.8 ஐ நன்கு அவதானித்து இலங்கைக்கு அண்மையில் உள்ள அகலாங்குகளின் பெயர்களைக் குறிப்பிடுக.




**தேசப்படம் 2.8 மத்தியக்கோட்டுக்கு அண்மையில் இலங்கையின் அமைவிடம்**


நீங்கள் கடற்கரைக்கு சென்ற ஒரு தினத்தை நினைத்துப்பாருங்கள். கரையில் நீங்கள் நிற்கும் போது கடலில் இருந்து வீசும் காற்று மிகவும் குளிர்ச்சியாக இருப்பதை அவதானித்து இருப்பீர்கள். பகல் நேரங்களில் நீர்தரைப் பகுதியை விட குளிராக இருப்பதனால் அங்கிருந்து வீசும்


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

காற்றும் குளிராக இருக்கும். கடலில் இருந்து தரையை நோக்கி வீசும் காற்று தரைப்பகுதியின் சூட்டைக் குறைக்கும். இலங்கை சிறிய தீவானதால் வருடம் பூராகவும் கடலின் செல்வாக்கிற்கு உட்படுகின்றது. எமது நாட்டின் எந்தப் பிரதேசமும் கடற்கரையிலிருந்து 112 கிலோமீற்றருக்கு உட்பட்டது. இதன் அடிப்படையில் எந்தவொரு பிரதேசத்தினதும் காலநிலையைத் தீர்மானிப்பதில் தரையின் உயரம், கடல் மட்டத்தில் இருந்துள்ள தூரம், என்பன செல்வாக்கும் செலுத்துகின்றன.

இலங்கையைச் சூழ கடல் இருப்பதால் முழு நாட்டினுடைய வெப்பமும் குறைக்கப்படுகின்றது. அத்தோடு தரையுயர்ச்சி காரணமாகவும் வெப்பம் குறைகிறது. அதாவது சிவனொளிபாத மலைக்கு நீங்கள் யாராவது சென்றிருப்பீர்கள் அல்லது சென்றவர்களிடம் கேட்டுப்பாருங்கள். நீங்கள் அம்மலையில் சிறிது தூரம் ஏறிச்சென்றதும் உங்கள் உடல் நடுங்க ஆரம்பிக்கும். இந்நிகழ்வானது கடல் மட்டத்திலிருந்து மேலே செல்லச் செல்ல ஒவ்வொரு 100 மீற்றர் உயரத்திற்கும் $0.64^{o}$ செல்சியஸ் வெப்பம் குறைவடைவதனால் ஏற்படுகிறது.

இலங்கை வெப்பவலய நாடாக இருப்பினும் குறிப்பிட்ட காலங்களில் பருவப்பெயர்ச்சிக் காற்றுக்கள் வீசுகின்றன. தென்மேல் பருவக்காற்றும் வடகீழ்ப் பருவக்காற்றும் குறிப்பிட்டகாலத்தில் மட்டும் வீசும் காற்றுக்களாகும்.




**தேசப்படம் 2.9 இலங்கை இந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருத்தலும் பருவக்காற்றுக்களின் செல்வாக்கும்.**


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

இப்பருவக்காற்றுக்கள் வீசுகின்ற காலத்திலும் செல்லுகின்ற பாதையிலும் உள்ள பிரதேசங்களின் வெப்பநிலை மட்டுப்படுத்தப்படுகின்றன. அத்தோடு இலங்கை இந்திய உபகண்டத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதால் வடபகுதியின் வெப்பம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

**இலங்கையின் வெப்பநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

1. அகலாங்கு நிலையம்
2. தரையுயர்ச்சி வேறுபாடு (உயரம்)
3. கடலில் இருந்து அமைந்துள்ள தூரம்
4. பருவக்காற்றுக்களின் செல்வாக்கு
5. இந்திய உபகண்டத்திற்கு அண்மையில் அமைந்துள்ளமை.

**செயற்பாடு**




1. இலங்கையின் வெப்பநிலைப் படத்தை அவதானித்து இலங்கைப் புறவுருவப்படத்தில் வெப்பநிலைப் பரம்பலைக்காட்டும் சமவெப்பக் கோடுகளைச் சிவப்பு நிறத்தினால் வரைந்து காட்டுக.
2. வெப்பம் கூடிய பிரதேசத்தையும் வெப்பம் குறைந்த பிரதேசத்தையும் எழுதுக.
3. நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் காணப்படும் வெப்பநிலை அளவு யாது? அவ்வாறான வெப்பநிலை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அட்டவணைப்படுத்துக.

**மாணவர் ஆய்வு**

இலங்கையின் காலநிலைப் படத்தை அவதானித்து வெப்பம் எவ்வாறு பரவிக் காணப்படுகின்றது என்பதை அறிவதோடு கொழும்பு, காலி, திருகோணமலை, அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களின் வெப்பநிலையின் அளவையும் நுவரெலியா, கண்டி, தலவாக்கலை, பீதுருதாலகால போன்ற பிரதேசங்களின் வெப்பநிலையின் அளவையும் பற்றிய தரவுகளைப் பெற்று வெப்பநிலை வேறுபடுவதற்கான காரணிகளைக் கலந்துரையாடுக.

## மழைவீழ்ச்சி

இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களில் மிகவும் இன்றியமையாதது மழைவீழ்ச்சி ஆகும். இலங்கை வருடம் முழுவதும் மழையைப் பெறுகிறது. பிரதேசத்திற்குப் பிரதேசம் மழைவீழ்ச்சி வேறுபாடிருப்பினும் வருடாந்தம் 750mm முதல் 6000mm வரையிலான மழை வீழ்ச்சியைப் பெறுகிறது.




**தேசப்படம் 2.10 இலங்கையின் காலநிலை வலயங்கள்**

- வருடம் முழுவதும் 2000mm க்கு மேல் மழைபெறும் பிரதேசம் ஈரவலயம்.
- வருடம் முழுவதும் 1250mm - 2000mm வரையும் மழைபெறும் பிரதேசம் உலர்வலயம்.
- வருடம் முழுவதும் 1250mm க்கு குறைவாக மழைபெறும் பிரதேசம் அரைகுறை வறள் வலயம்.

**இலங்கை மழைபெறும் மூன்று பிரதான வழிமுறைகள்**

1. **மேற்காவுகை**
2. **பருவக்காற்றுக்கள்**
   - I **தென்மேல் பருவக்காற்று**
   - II **வடகீழ் பருவக்காற்று**
3. **சூறாவளிகள்**

இலங்கை ஒரு தீவாக அமைந்திருப்பதாலும் தரைத் தோற்ற வளிச்சுற்றோட்டம் ஆகியன காரணமாகவும் இவ்வாறான மழை வகைகள் வருடத்தில் ஒவ்வொரு காலங்களிலும் ஏற்படுகின்றன.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "


## மேற்காவுகை மழை

இலங்கையின் அமைவிடம் காரணமாக இம்மழை கிடைக்கின்றது. இதன் சிறப்பம்சம் என்னவெனில் மாலை வேளையில் இடி மின்னலுடன் கூடிய மழை ஒரு மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து பெய்தலாகும். இம்மழை மார்ச், ஏப்ரல், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இடம்பெறுவதை நாம் அவதானிக்கலாம். அதாவது பருவக்காற்றுக்களின் இடைப்பட்ட காலங்களிலேயே இம்மழை கிடைக்கின்றது.

## பருவக்காற்றுக்கள்

### தென்மேல் பருவக்காற்று

இந்து சமுத்திரத்தின் ஊடாக வருவதனால் தென்மேல் பருவக்காற்றானது அதிகளவு நீரைச் சுமந்து கொண்டு வந்து இலங்கையின் தென்மேற்குப் பகுதிகளுக்கும் மத்திய மலைநாட்டின் மேற்குப் பகுதிகளுக்கும் அதிக மழையைக் கொடுக்கின்றது. மே மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை இப்பருவக்காற்றின் செல்வாக்கைக் காணலாம். இலங்கையின் கரையோரத்திலிருந்து உள்ளே செல்லச் செல்ல உயரம் அதிகரிப்பதால் நீராவியுடனான காற்று மலைச்சரிவுகள் வழியே உயர்ந்து குளிர்வடைந்து மழையைப் பொழிகின்றது.





தேசப்படம் 2.11 இலங்கையின் தென்மேல் பருவக்காற்று

### வடகீழ் பருவக்காற்று

வடகீழ் பருவக்காற்றானது இந்திய உபகண்டத்தினூடாக சிறிய நீர்ப் பிரதேசமான வங்காள விரிகுடாவைக் கடந்து வீசுவதன் காரணமாக வடகீழ் பிரதேசங்களுக்குக் குறைவான மழையையே கொடுக்கிறது. டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை இப்பருவக்காற்று செல்வாக்குச் செலுத்துகிறது. தென்மேல் பருவக்காற்றின் செயற்பாட்டைப் போன்று இப்பருவக்காற்று முக்கியமானதல்ல.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "




**தேசப்படம் 2.12 இலங்கையின் வடகீழ் பருவக்காற்று**

## சூறாவளி

சூறாவளிக் காற்றுக்கள் மூலமும் இலங்கை மழையைப் பெறுகின்றது. இதனைச் சுழல் காற்றுக்கள் என்றும் அழைப்பர். சூறாவளிகள் வருடத்தில் எக்காலத்திலும் இடம்பெறலாம். ஆனால் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இதன் தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

இலங்கையின் காலநிலையின் தனித்துவம் ஏனைய உலக நாடுகளின் காலநிலைகளை விட சிறப்பான தன்மைகளைக் கொண்டிருக்கிறது. இதனால் உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் (சுற்றுலாப் பயணிகள்) இக்காலநிலை நிலைமைகளை அனுபவிப்பதற்காக வருகின்றனர். இவ்வாறு பலவிதமான காலநிலைத் தன்மைகள் காணப்படுவது சுற்றுலாத்துறை வளர்ச்சியடைவதற்குக் காரணமாக உள்ளது.

இலங்கையின் காலநிலையின் இன்னோர் சிறப்பம்சம் என்னவெனில் ஒரே நாளில் பிரயாணம் செய்வதன் மூலம் பல்வேறு காலநிலைப் பிரதேசங்களில் காணப்படும் வேறுபாடுகளை தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

**செயற்பாடு**

1. கல்விச் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்து நீங்கள் வசிக்கும் பிரதேசக் காலநிலை தன்மைகளில் இருந்து வேறுபட்ட பிரதேசத்திற்கு சென்று காலநிலையை அறிக. உமது பிரதேசத்திற்கும், நீங்கள் சென்ற பிரதேசத்திற்கும் இடையிலான வேறுபாட்டைக் கலந்துரையாடுக.
2. நீங்கள் வாழும் பிரதேசத்திற்கு அதிகமாகக் கிடைக்கும் மழைவீழ்ச்சி வகையைப் பெயரிடுக.
3. நீர் குறிப்பிட்ட மழைவீழ்ச்சி வகை கிடைக்கும் மாதம், கிடைக்கும் விதம், மழைவீழ்ச்சியின் தன்மை என்பவற்றை விளக்குக.

## பொருளாதாரம்




**தேசப்படம் 2.13 இலங்கையில் பரவிக் காணப்படும் பொருளாதார நடவடிக்கைகள்**

இலங்கையின் அமைவிடத்திற்கு ஏற்ப அதற்கு தனித்துவமான காலநிலை காணப்படுகின்றது. இலங்கையில் குடியிருப்புகளுக்கு பிரதான அடிப்படையாக புவியியல் பின்னணியே அமைந்திருந்தது. முற்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த போதும் இன்றைய எமது பொருளாதாரம் பல துறைகளில் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

**இலங்கையின் பொருளாதாரமானது விவசாயம், கைத்தொழில், சேவை ஆகிய துறைகளைக் கொண்டுள்ளது.**

இலங்கையின் தரைத் தோற்ற அமைப்பு செழிப்பான மண், சாதகமான காலநிலை, நீர் வசதி என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த விவசாயத்துறை மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. இவ்விவசாயத் துறையானது மூன்று பிரிவுகளாகக் காணப்படுகின்றது.

1. பயிர்ச்செய்கை
2. கால்நடை வளர்ப்பு
3. மீன்பிடிக் கைத்தொழில்

**செயற்பாடு**



1. தேசப்படம் 2.13 இனை அவதானிக்குக. அதில் காட்டப்பட்டுள்ள ஒளிப்படங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
2. நீங்கள் இனங்கண்ட தகவல்களை விவசாயம், கைத்தொழில், சேவை என வகைப்படுத்திக் காட்டுக.

**மாணவர் ஆய்வு**

- குழுக்களாகப் பிரிந்து பாடசாலைக்கு அண்மையிலுள்ள பிரதேசத்தில் காணக்கூடிய பொருளாதார நடவடிக்கைககள் பற்றிய தகவல்களைத் திரட்டி அறிக்கை தயாரிக்குக.
- இத்தகையை பொருளாதாரக் கோலம் ஏற்படுவதில் தாக்கம் செலுத்திய காரணிகளை ஆசிரியர் உதவியுடன் அறிக்கையாகத் தயாரிக்குக.
- நீர் வசிக்கும் பிரதேசத்தின் பொருளாதார விருத்தி பற்றிய தகவல்கள் அடங்கிய கையேடு தயாரிக்குக.

**விவசாயப் பொருளாதாரம் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரிதும் துணை புரிகின்றது. தேசிய உணவுப்பயிர் உற்பத்தியும் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் பயிர் வகைகளும் இங்கு முக்கியமானது.**



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

இலங்கையில் நான்கு வகையான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

**தேசிய உணவுப் பயிர்**

- நெல்
- தானியம் (குரக்கன் /கோதுமை /சோளம்)
- அவரை பயிர் (பயறு/ கௌபி /சோயா அவரை /துவரம் பருப்பு /கடலை)
- கிழங்கு வகை (உருளைக்கிழங்கு/ மரவள்ளி வற்றாளை/ சிகைக்கிழங்கு/ நிலக்கடலை / எள்/ முந்திரிகை)
- வேறு பயிர்கள் (மிளகாய்/ சின்ன வெங்காயம்/ மஞ்சள்/ கொத்தமல்லி/ கறி மிளகாய்/ வெந்தயம்/ கடுகு)
- மரக்கறி
- பழவகை

இத்தகைய பயிர்ச்செய்கையில் பயிரிடப்படும் சில பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் மூலம் நாட்டிற்கு ஏற்றுமதி வருமானம் கிடைக்கிறது.





**மீன்பிடி**

இலங்கையைச் சூழவுள்ள கண்டமேடைப்பகுதிகளில் மீன்பிடிக் கைத்தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. உள்நாட்டில் காணப்படும் ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் என்பவற்றில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் நடைபெறுகின்றது.

### விலங்கு வேளாண்மை

புல்நிலங்களிலும் வீடுகளிலும் பண்ணைகளிலும் ஆடு, மாடு, கோழி, பன்றி போன்றன வளர்க்கப்படுகின்றன. விலங்கு வேளாண்மையில் தரைத்தோற்றம் மண் காலநிலை மற்றும் கலாசாரம் என்பன செல்வாக்கு செலுத்துகின்றன.



**செயற்பாடு**

மூன்று குழுக்களாகப் பிரிந்து இலங்கையின் பொருளாதாரத்தைக் காட்டும் ஆக்கபூர்வமான நாட்காட்டி ஒன்றைத் தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### கைத்தொழில்

இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத்தையும் கைத்தொழிலையும் ஒன்றிலிருந்து இன்னொன்றாகப் பிரித்துப் பார்க்க முடியாதுள்ளது. விவசாயப்-பொருட்கள் கைத்தொழில் துறையின் மூலப்பொருட்களாக விளங்குகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| சீனிக்கைத்தொழில் | - | மூலப்பொருள் | - | கரும்பு. |
| கடதாசிக்கைத்தொழில் | - | மூலப்பொருள் | - | நெல். |
| ரயர் கைத்தொழில் | - | மூலப்பொருள் | - | இறப்பர். |



**செயற்பாடு**

1. விவசாய மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழில்களைக் காட்டும் சுவரொட்டி ஒன்று வரைக.
2. உமது பிரதேசத்தில் விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான உமது கருத்துக்களை முன்வைக்குக.

**மாணவர் ஆய்வு**

உமது பிரதேசத்தில் அல்லது மாவட்டத்தில் அல்லது மாகாணத்தில் விவசாயப்பொருட்கள் கைத்தொழிலுக்கு மூலப்பொருட்களாக எவ்வாறு பயன்படுத்தப்-படுகின்றன என்பதனை அட்டவணைப்படுத்துக.

| உற்பத்திக் கைத்தொழில் | பயன்படுத்திய மூலப்பொருள் |
|---|---|
| | |



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

இலங்கை கனிய வளங்கள் பலவற்றைக் கொண்டுள்ள வளமான நாடாகும் இந்த வளங்களை பயன் பயன்படுத்தி உற்பத்தியாகும் பலவகையான கைத்தொழில்கள் இலங்கையில் பரவிக் காணப்படுகின்றன.

உதாரணமாக :


| | | |
|---|---|---|
| களிமண் | ------ | ஓடு, செங்கல், பீங்கான் பொருட்கள் |
| இரத்தினக்கற்கள் | ------ | ஆபரணங்கள் |
| சுண்ணாம்பு | ------ | சீமெந்து |
| முருகைக்கல் | ------ | சுண்ணாம்புக்கல் உற்பத்திக் கைத்தொழில் |

கிராமங்களில் பரம்பரையாக இடம்பெறும் தொழில்களையும் நாம் காணலாம். இவை குடிசைக் கைத்தொழில்கள் என அழைக்கப்படுகின்றன. குடிசைக் கைத்தொழிலாக இருந்தாலும் இவையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றன.

உதாரணங்கள் :

| | | |
|---|---|---|
| அம்பலாங்கொடை | ------ | முகமூடிக்கைத்தொழில் |
| கண்டி | ------ | பித்தளைப் பொருட்கள் |
| யாழ்ப்பாணம் | ------ | பனைசார் உற்பத்திகள் |

**செயற்பாடு**



உங்கள் பாடசாலைக்கு அண்மையில் உள்ள பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள் உள்ளனவா? என ஆராய்ந்து பார்க்குக. அத்தகவல்களைக் கொண்டு அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.

**மாணவர் ஆய்வு**

- உமது பிரதேசத்தில் இடம் பெறும் குடிசைக் கைத்தொழில்களைக் குறிப்பிடுக. இவற்றினால் உமது கிராமம் பெறும் நன்மைகளை எழுதுக.
- எதிர் காலத்தில் உங்களால் மேற்கொள்ளக் கூடிய சிறுகைத்தொழில்கள் உள்ளனவா எனப் பரிசீலிக்குக.
- இதன் பொருட்டு உமக்குத் தேவையானவை எனக் கருதுவதனைப் பற்றிக் குறிப்பொன்றைத் தயாரிக்குக.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமது நாடு ஒரு சிறிய நாடாக இருப்பினும் இலங்கைக்கே உரிய விசேட தனித்துவங்கள் உள்ளன. இதன் காரணமாக இலங்கை மேலைத்தேய கீழைத்தேய நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தைப் போலவே கப்பற் போக்குவரத்திலும் இலங்கை மத்திய நிலையமாக விளங்குகின்றது. இன்றும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான முக்கிய காரணம் இந்த விசேட தனித்துவமாகும். இதனால் தனித்துவத்தைப் பேண நாம் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுதலும் அவசியமாகும்.

**மாணவர் பயிற்சி**

01. கீழே தரப்பட்ட “அ” பகுதியிலுள்ளவற்றை “ஆ” பகுதியிலுள்ளவற்றுடன் தொடர்புபடுத்துக.

| அ | ஆ |
|---|---|
| ஆட்புல கடல் எல்லை | பாக்குநீரிணை |
| மிகச்சிறிய நிருவாக எல்லை | சுற்றுலாக் கைத்தொழில் |
| மழை கிடைக்கும் முறை | கிராம சேவகர் பிரிவு |
| சேவைக் கைத்தொழில் | மீன்பிடிக் கைத்தொழில் |
| இந்தியாவைப் பிரிக்கும் | பருவக்காற்றுக்கள் |

02. கீழே தரப்பட்ட தகவல்களைக் கொண்டு குறுக்கெழுத்துச் சட்டத்தை நிறைவு செய்க.


**இடமிருந்து வலமாக**

1. பிரதேச செயலாளர் பிரிவுகளை ஒன்றிணைக்கும் நிருவாக அலகு.
2. “ **மீன்பாடும் தேன்நாடு** ”

**மேலிருந்து கீழாக**

3. இலங்கையின் மத்தியில் இருக்கும் பகுதி
4. வெப்பம் அதிகரித்தால் வருவது
5. இலங்கையைச் சூழவும் இது இருக்கிறது.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "




## சாராம்சம்

- இலங்கையின் அமைவிடம், காலநிலை, பொருளாதாரம் என்பவற்றில் தனித்துவமான சிறப்புக்கள் உள்ளன.
- இலங்கை நாட்டின் ஆட்புல எல்லை சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- நிருவாக நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கு இலங்கை பல்வேறு நிருவாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை சிறிய தீவாக இருந்த போதும் சிறப்பான காலநிலைப் பண்புகளைக் கொண்டுள்ளது.
- இலங்கையின் பொருளாதாரம் பெரும்பாலும் விவசாயத்துறை சார்ந்ததாகவே உள்ளது.